நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் பற்றிய அறிக்கை

குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் காலாண்டு 3 மற்றும் காலாண்டு 4

இலங்கை மத்திய வங்கி

2026 மார்ச்சு

2025இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில், காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்ச்சியான இரண்டு காலாண்டுகளிற்கு, நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணவீக்க இலக்கிற்குக் கீழாக இரண்டு சதவீதப் புள்ளிகளை விட அதிகமாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையினால், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் கௌரவ. நிதி அமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.

-இந்த பக்கம் வெறுமையாக விடப்பட்டுள்ளது-

நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் பற்றிய அறிக்கை

குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் காலாண்டு 3 மற்றும் காலாண்டு 4

இலங்கை மத்திய வங்கி | 2026 மாச்சு

---

1. அறிமுகம்

1.1. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் மத்திய வங்கிச் சட்டமெனக் குறித்துரைக்கப்படும்) 26(1)ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதியமைச்சருக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் 2023 ஒத்தோபர் 03ஆம்[1] நாளன்று கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை[2] 5 சதவீத மட்டமொன்றில் பேணுவதற்கு மத்திய வங்கிக்கு ஆணையளிக்கின்றது. மேலும், மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவானது மத்திய வங்கி நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கினைக் குறித்துரைக்கப்பட்ட இடைவெளியொன்றினுள் தொடர்ச்சியான இரண்டு காலாண்டுகளில் பூர்த்திசெய்யத் தவறினால் பணவீக்க இலக்கினை எய்தத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள், மற்றும் பணவீக்க இலக்கு எக்காலவரையறையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பவற்றினைக் குறித்துக்காட்டி மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது கௌரவ நிதியமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், அது பொதுமக்களுக்கும் கிடைப்பனவாக இருத்தல் வேண்டும். மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(5)இன் நோக்கத்தினை அடையும் பொருட்டு நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையானது இடைவெளியினை ±2 சதவீத புள்ளிகளெனக் குறித்துரைக்கின்றது.

---

[1] 2023 ஒத்தோபர் 05ஆம் திகதியிடப்பட்ட 2352/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

[2] காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாதங்களுக்கான மாதாந்த முதன்மை கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலுள்ள ஆண்டுக்கு ஆண்டு சதவீத மாற்றங்களின் சாதாரண சராசரியினைக் குறிக்கின்றது.

1.2. அடையப்பட்ட தரவுகளின் அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்தின் காலாண்டுச் சராசரி 2025இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் முறையே 0.8 சதவீதமாகவும் 2.1 சதவீதமாகவும் பதிவுசெய்யப்பட்டது. தொடர்ச்சியாக இரு காலாண்டுகளுக்கு 2 சதவீதப் புள்ளிகளுக்கு அதிகமாக (அதாவது 3.0 சதவீதத்திற்குக் கீழ்) 5 சதவீத இலக்கிற்குக் கீழ் பணவீக்கம் காணப்பட்டமையினால் மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. 2024இன் இறுதி மூன்று காலாண்டுப் பகுதியிலும் 2025இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது இலக்கிற்கு கீழே காணப்பட்டமையினால், 2024 திசெம்பரிலும், 2025 மாச்சிலும், யூனிலும் ஓகத்திலும் மற்றும் திசெம்பரிலும் இதையொத்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.[3] இதற்கமைய, காலாண்டு முதன்மைப் பணவீக்கம் 2025இன் நான்காம் காலாண்டில் இலக்கிற்குக் கீழ் தொடர்ந்தும் காணப்பட்டமையினால், கடந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்தொடராக இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

1.3. முதன்மைப் பணவீக்கமானது, அதன் பணச்சுருக்க கட்டத்திலிருந்து மீட்சியடைந்து, 2025இன் மூன்றாம் காலாண்டில் நேர்க்கணியப் புலத்திற்கு திரும்பலடைந்து, நான்காம் காலாண்டில் அதன் படிப்படியாக அதிகரிக்கும் பாதையில் தொடர்ந்து சென்றது. எனினும், அது 3 சதவீதத்திற்கு கீழேயே காணப்பட்டு, இலக்கிலிருந்து கீழ்நோக்கிய விலகலொன்றைப் பதிவுசெய்தது. டித்வா புயலுடன் தொடர்புடைய இடையூறுகள் இக்காலப்பகுதியில் பணவீக்கம் மீதான வரையறுக்கப்பட்ட தாக்கத்தை கொண்டிருந்தது. 2026 சனவரி நாணயக் கொள்கை சுற்றில் வெளியிடப்பட்ட தற்போது கிடைக்கக்கூடியதான உத்தியோகபூர்வ பணவீக்க எதிர்வுகூறல்கள், கேள்வியில் உத்வேகமொன்றினால் பகுதியளவில் பங்களிக்கப்பட்டு , பணவீக்கத்தின் அதிகரிக்கும் போக்கு தொடருமென எடுத்துக்காட்டுகின்றது. எவ்வாறெனினும், இவ்வெறிவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பணவீக்க பாதை முன்னர் எதிர்பார்த்ததை விட தாழ்ந்தளவில் காணப்பட்டு, முதன்மை பணவீக்கமானது குறைந்தது 2026இன் முதல் அரையாண்டு முழுவதும் 3 சதவீதத்திற்கு கீழேயே காணப்படக்கூடும் என எடுத்துக்காட்டுகின்றது. எனினும், மேற்குறித்த எதிர்வுகூறல்களினை வெளியிட்டதற்கு பின்னர் வெளிப்பட்ட அமெரிக்க- ஈரான் போர், உலகளாவிய வலு விலைகளில் கணிசமான மற்றும் தொடர்ந்து படிப்படியான உயர்விற்கு வழிவகுத்ததுடன், இது பணவீக்கத்தின் அதிகரிப்பை துரிதப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நெருக்கடியின் நிச்சயற்றத்தன்மையினையும் கணிசமான எதிர்மறை பொருளாதார கசிவுத்தாக்கங்கள் உருவாக்கும் அதன் சாத்தியப்பாட்டையும் கருத்திற்கொள்கையில், தற்போதைய

[3] பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கம் விலகியமை மீதான முன்னைய அறிக்கைகள் https://www.cbsl.gov.lk/ta/நாணயக்-கொள்கை/நாணயக்-கொள்கை-தொடர்பூட்டல்/பாராளுமன்றத்திற்கு-பொறுப்புக்கூறல் என்ற இணைப்பில் கிடைக்கப்பெறுகின்றன.

சூழ்நிலையில் பேரண்டப்பொருளாதார எறிவுகள் அதீத தளம்பல்மிக்கதாக காணப்படுகின்றன. அண்மைய அபிவிருத்திகளை கருத்திற்கொள்கையில், காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2026இன் இரண்டாம் காலாண்டு தொடக்கம் இலக்கின் ±2 சதவீதப் புள்ளிகள் எல்லைக்குள் காணப்படுவதற்கு அதிக சாத்தியப்பாடொன்று காணப்பட்டு, பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, நடுத்தரக் காலத்தில் அவ்விலக்கினை அண்மித்து உறுதியடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2. பணவீக்க இலக்கிலிருந்து விலகியமைக்கான காரணங்கள்

கூட்டுக் கேள்வியின் மெதுவான மீட்சியொன்றிற்கு மத்தியில், அண்மைய காலப்பகுதியில் நிரம்பல் பக்க காரணிகள் பணவீக்கத்திற்கு அதிகம் செல்வாக்குசெலுத்தின. முன்னைய அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2024இன் இறுதி மூன்று காலாண்டுப் பகுதியிலும் 2025இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் பணவீக்கப் பாதை பெரும்பாலும் மின்சார கட்டணங்கள், எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பவற்றின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் அதேபோன்று உணவுப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களாலும் தூண்டப்பட்டிருந்தது. செலாவணி வீதங்களின் அசைவுகளும், பிரதானமாக இறக்குமதி விலைகள் மற்றும் உள்நாட்டு செலவு நிலைமைகள் என்பவற்றின் மீதான தாக்கத்தினூடாக, பணவீக்க இயக்கவாற்றலை வடிவமைப்பதில் பங்காற்றின. எதிர்பார்க்கப்பட்ட சில விலை மாற்றங்களை குறிப்பாக மின்சார கட்டணங்கள் போன்றவற்றை, விலையிடலிலும் காலநேரத்திலும் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் காரணமாக துல்லியமாக முன்னறிவிப்பது சவாலானதாக இருந்து வருகிறது. முன்னைய அறிக்கைகளில் இக்காரணிகளை விளக்கி, தற்போதைய அறிக்கை 2025இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் இலக்கிலிருந்து தொடர்ச்சியான விலகல் மீது கவனம்செலுத்துகின்றது.

2.1. எதிர்பார்க்கப்பட்டவாறு, பணவீக்கம் 2025இன் மூன்றாம் காலாண்டில் மீண்டும் நேர்கணியப் புலத்திற்கு திரும்பலடைந்ததைத் தொடர்ந்து, பதினொரு மாதங்களின் பணச்சுருக்கப் போக்கின் முடிவுறுதலை அடையாளப்படுத்தி 2025இன் நான்காம் காலாண்டில் தொடர்ந்தும் படிப்படையாக உயர்வடைந்தது. வலு மற்றும் போக்குவரத்து என்பவற்றுடன் தொடர்புடைய விலைகளில் ஏற்பட்ட பணச்சுருக்க அழுத்தங்களின் தளர்வடைதலுடன் இணைந்து, குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் இவ்வுயர்வடைதல் பிரதானமாகத் தூண்டப்பட்டது. எவ்வாறிருப்பினும், ஒப்பீட்டு ரீதியில் தாழ்வான மையப் பணவீக்கம் மற்றும் வலு மற்றும் போக்குவரத்து வகைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான பணச்சுருக்கம் போன்றவற்றுக்கு மத்தியில் ஒட்டுமொத்த விலை அதிகரிப்புகள் பெருமளவில் படிப்படியாக காணப்பட்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2025இன் நான்காம் காலாண்டில் 2.1 சதவீதம் கொண்ட காலாண்டு பணவீக்கமொன்றைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்து, இதன்மூலம், 3.0 சதவீதத்திற்கு கீழே காணப்பட்டது.

வரைபடம் 1: காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100, ஆண்டிற்காண்டு, %)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2: முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2023 சனவரிக்கு முன்னைய தரவுகள் கொ.நு.வி.சுட்டெண் (2013=100)இன் அடிப்படையிலமைந்துள்ள வேளையில், 2023 சனவரியில் ஆரம்பிக்கின்ற தரவுகள் கொ.நு.வி.சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்துள்ளன).

வரைபடம் 3: முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், 2021=100 ஆண்டிற்காண்டு, %)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2.2. இதேவேளை, மையப் பணவீக்கம் தாழ்ந்த நேர்கணிய மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டு, 2025இன் நான்காம் காலாண்டில் 2.4 சதவீதத்தினைப் பதிவுசெய்து, பொருளாதாரத்தில் தாழ்ந்த கேள்வி நிலைமைகளை எடுத்துக்காட்டியது. 2025இன் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் மையப் பணவீக்கமானது உணவல்லா வகைகளின் குறிப்பாக ‘கல்வி’ மற்றும் ‘வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள்’ போன்ற விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பாரியளவில் தூண்டப்பட்டு, படிப்படியான உயர்வடைதலைப் பதிவுசெய்தது. தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு மற்றும் இறக்குமதிகளின் அதிகரிப்பு போன்ற ஏனைய குறிகாட்டிகள் சுட்டிக்காட்டுவதைவிடவும் கேள்வியின் உத்வேம் ஓரளவு இருக்கக்கூடும் என மையப் பணவீக்கத்தின் மெதுவான வேகம் குறித்துக்காட்டுகின்றது. எதிர்வரும் காலப்பகுதியில் மையப் பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்பொன்று எதிர்பார்க்கப்பட்டு, தாழ்ந்தளவிலான தளம்பலொன்றுடன், முதன்மைப் பணவீக்க இலக்குடன் ஒத்திசைவான மட்டத்தில் உறுதிநிலையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விலைகளில் ஏற்படக்கூடிய கசிவுத்தாக்கங்கள், ஒப்பீட்டளவில் மையப் பணவீக்கத்தையும் உயர்வடைந்த பாதையில் கொண்டுசெல்வதற்கு பங்களிக்கக்கூடும்.

2.3. நீண்ட காலமாக எதிர்கணிய மட்டங்களில் காணப்பட்ட வலு மற்றும் எரிபொருள் பணவீக்கம், படிப்படியான அதிகரிப்பைப் பதிவுசெய்து, முதன்மைப் பணவீக்கத்தின் அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது. எனினும், என முன்னர் எதிர்பார்க்கப்பட்ட சில விலை அதிகரிப்புக்கள் இடம்பெறாதமைக்கு மத்தியில் அதன் அதிகரிப்பு எதிர்பார்த்ததை விடவும் மெதுவானதாக காணப்படுகின்றது. முதன்மைப் பணவீக்கம் பணச்சுருக்க மட்டங்களில் காணப்பட்டபோது அண்மைய மாதங்களிலும் கூட ஒப்பீட்டளவில் நிலையாகவிருந்த பணிகள் பணவீக்கமானது படிப்படியான மேல்நோக்கிய எறிவுப் பாதையொன்றை நோக்கிச் செல்ல தொடங்கியுள்ளது. மறுபுறத்தில், முதன்மைப் பணவீக்கத்தின் அதிகரிப்பிற்கு தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கத்தின் பங்களிப்பானது அண்மை காலத்தில் நிலையானதாகக் காணப்படுகின்றது. 2025 திசெம்பரில் டித்வா புயலினால் ஏற்பட்ட நிரம்பல் தடைகள் உணவுப் பொருட்களில் சில விலை அதிகரிப்புகளுக்கு வழிவகுத்திருந்த போதிலும், மாதத்திற்கு மாத விலை அழுத்தங்கள் சாதகமான புள்ளவிபரத் தளத் தாக்கத்தினால் எதிரீடு செய்யப்பட்டமையினால் அது ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்தில் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

2.4. 2025இன் இரண்டாம் காலாண்டு மற்றும் மூன்றாம் காலாண்டிற்கு ஏற்புடைய 2025 திசெம்பர் அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், பல்வேறு முக்கிய ஊகங்களுக்கான திருத்தங்களைப் பிரதிபலித்து, 2026 சனவரியில் நாணயக் கொள்கைச் சுற்றில் எறிவுசெய்யப்பட்ட பணவீக்கப் பாதை பரந்தளவில் தாழ்வாகவே காணப்படுகிறது. முன்னர் ஊகிக்கப்பட்டதைப் போன்று, 2026இன் முதலாம் காலாண்டில் மின்சாரக் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்குவரவில்லை என்பதால், வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கம் முன்னர் எறிவுசெய்யப்பட்டதை விடவும் மேலும் படிப்படியாக அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, மையப் பணவீக்கத்தில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டவாறு, அடிப்படை விலைகளில் எதிர்பார்த்ததை விடவும் குறைவான அதிகரிப்பும் தாழ்ந்த பணவீக்கப் பாதைக்கு பங்களித்திருந்தது. உலகளாவிய அபிவிருத்திகள் மீதான ஊகங்கள் உலகளாவிய எறிவுகளின் மாதிரி வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்டவையாகும். முன்னைய அறிக்கையுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய வெளியீடு, நிதியியல் நிலைமைகள், உலகளாவிய உணவு விலைகள் மற்றும் எண்ணெய் விலைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஊகங்களின் மாற்றங்களுடன் உலகளாவிய தோற்றப்பாடு திருத்தம்செய்யப்பட்டது. வர்த்தகத்துடன் தொடர்புடைய முரண்பாடுகள், புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மைகள், மற்றும் கட்டுப்பாட்டு நிதியியல் நிலைமைகள் போன்றன இருந்தபோதிலும், முக்கிய பொருளாதாரங்களிடையே மிகுந்த தாக்குபிடிக்கும் தன்மை கொண்ட பொருளாதார நடவடிக்கையினைப் பிரதிபலித்து, உலகளாவிய வளர்ச்சியானது முன்னர் எறிவுசெய்யப்பட்டதை விடவும் உறுதியாகவிருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. உலக உணவுப் பணவீக்கம் 2026ஆம் ஆண்டில் தாழ்ந்த பாதையொன்றைப் பின்தொடர்ந்து அதைத்தொடர்ந்து 2027இல்

ஓரளவு உயர்ந்த பாதையினைப் பின்தொடருமென எறிவுசெய்யப்பட்டது. மேம்பட்ட நிரம்பல் எதிர்பார்க்கைகளைப் பிரதிபலித்து, முன்னைய அறிக்கையுடன் ஒப்பிடுகையில் உலக எண்ணெய் விலைகளுக்கான பாதை கீழ்நோக்கி திருத்தம்செய்யப்பட்டிருந்த அதேவேளை புவிசார்அரசியல் பதற்றங்கள் அதிகரித்தளவிலேயே காணப்பட்டன. அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கை தளர்த்தலானது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் வேகமாக செயற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டு, நடுத்தர காலத்தில் தாழ்ந்த கொள்கை வீதமொன்றை எடுத்துக்காட்டியது. அப்போதைய பிந்திய எறிவுகள் 2026ஆம் ஆண்டிற்கான உயர்ந்தளவான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை உள்ளடக்கியிருந்ததைக் கொண்டு, 2026ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பி வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு இறைத் துறையுடன் தொடர்புடைய ஊகங்களும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. ஊகங்களுக்கான இத்திருத்தங்கள் அனைத்தும் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கப் பாதையில் திருத்தமொன்றை மேற்கொள்வதற்கு கூட்டாகப் பங்களித்திருந்தன.

3. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள்

3.1. **நாணயக் கொள்கையானது பணவீக்கத்தின் மீதான கேள்விப் பக்க அழுத்தங்களைத் தணிப்பதனை நோக்காகக் கொண்டுள்ள வேளையில், மத்திய வங்கி நிரம்பல் பக்க அதிர்வுகளையும் உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன் அவை பணவீக்க எதிர்பார்க்கைகளைக் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கிற்குட்படுத்துமாயின் அல்லது கசிவுத்தாக்க விளைவுகளினூடாகப் பணவீக்கத் தோற்றப்பாட்டில் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு வழிவகுக்குமாயின் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்கின்றது.** இருப்பினும், இத்தகைய நீடித்த தாக்கங்களில்லாத பட்சத்தில், நாணயக் கொள்கையானது காலதாமதமொன்றுடன் தொழிற்படுவதனால் குறுங்கால நிரம்பல் பக்க இடையூறுகளை நிவர்த்தி செய்வதில் அதன் செயற்றிறன் குறைந்தளவில் காணப்படுகின்றது.

3.2. **2023 யூனில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றினைப் பின்பற்றியதிலிருந்து, கொள்கை வட்டி வீதங்கள், 2025 மேயில் 25 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட இறுதிக் குறைப்பு உள்ளடங்கலாக மொத்தமாக ஏறத்தாழ 8.00 சதவீதப் புள்ளிகளினால் குறைவடைந்துள்ளன.[4]**

3.3. **மத்திய வங்கியானது 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் ஓரிரவு கொள்கை வீதத்தினை 7.75 சதவீதத்தினைக் கொண்ட அதன் தற்போதைய மட்டத்தில்**

[4] தற்போதைய கொள்கை வட்டி வீதங்கள் வரலாற்று ரீதியிலான போக்குகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் தாழ்ந்தளவிலான மட்டங்களில் காணப்படுகின்றன. மேலும், நியதி ஒதுக்கு விகிதமானது 2023 ஓகத்தில் 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் அதிலிருந்து இத்தாழ்ந்தளவிலான மட்டத்திலேயே பேணப்பட்டு வருகின்றது.

பேணுவதற்குத் தீர்மானித்தது. தற்போதைய நாணயக் கொள்கை நிலைப்பாடானது அதிகரித்த கேள்வி அழுத்தங்களுக்கு இட்டுச்செல்லாமல், பணவீக்கத்தினை 5 சதவீத இலக்கினை நோக்கி வழிநடத்துவதற்கு ஆதரவளிக்குமென நாணயக் கொள்கைச் சபை கருதியது. இதேவேளை 2025ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் 4.8 சதவீதத்தினைப் பதிவுசெய்து பொருளாதாரம் 2025இல் 5.0 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் தனியார் துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் வழங்கல் 2025ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அதன் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைத் தொடர்ந்தது. மேலும், அதிகரித்த இறக்குமதிகளிடையே வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்த போதிலும், வெளிநாட்டுக் நடைமுறைக் கணக்கானது 2025இல் கணிசமான மிகையொன்றைப் பதிவுசெய்துள்ளதாக மதிப்பிடப்படுகின்றது. 2025ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு பணவனுப்பல்கள் ஆரோக்கியமான நிலையில் காணப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் பாரிய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் காணப்பட்ட போதிலும் பிரதானமாக மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மற்றும் பல்புடை முகவர்களிடமிருந்தான உட்பாய்ச்சல்கள் ஊடாக ஆதரவளிக்கப்பட்டு 2025ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 6.8 பில்லியன் வரை கட்டியெழுப்பப்பட்டன. இலங்கை ரூபாவானது 2025ஆம் ஆண்டில் ஐ.அ.டொலருக்கு எதிராக 5.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

3.4. **இச்சூழலில், பணவீக்கமானது இலக்கிற்கு அருகாமையில் நிலைப்படுத்தப்பட்டு அதேவேளை பொருளாதாரமானது அதன் சாத்தியமான தன்மையினை அடைவதற்கு ஆதரவளிப்பதனை உறுதிசெய்வதற்குப் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாணயக் கொள்கைச் சபை கவனம் செலுத்துகிறது.** தளம்பல்மிக்க வெளிநாட்டுச் சூழல் மற்றும் உள்நாட்டு நிச்சயமற்ற தன்மைகளிடையே ஏதேனும் வளர்ச்சி சார்ந்த எதிர்மறை அதிர்வுகள் பொருண்மியமாகும் பட்சத்தில் கொள்கைத் தளர்த்தலுக்கு இடம் காணப்படுகின்றது. எனினும், ஏதேனும் மேலதிக கொள்கைத் தளர்த்துகையானது குறிப்பாக சாதகமான கொடுகடன் விரிவாக்கம் மற்றும் கூட்டுக் கேள்வியின் மீட்சி என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, பொருளாதாரம் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்வதனால் காலதாமதமொன்றுடன் பொருளாதாரத்தின் சாத்தியமான தன்மையிலான விஞ்சியளவிலான இடர்நேர்விற்கு எதிராக பரீசீலிக்கப்படும். மத்திய வங்கி எதிர்பார்ப்புகளை முகாமைப்படுத்துவதற்கு முன்கூட்டியே தொடர்பூட்டுவதுடன் நாணயக்கொள்கை நடைமுறையை பயனுறுதி செய்யும் வகையில் அதன் தொழிற்பாடுகளை சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான முறையில் நடாத்தும்.

4. பணவீக்க இலக்கு எக்காலவரையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலப்பகுதி பற்றிய ஒரு மதிப்பீடு

4.1. **இதுவரையிலுள்ளவாறான அண்மைய உத்தியோகபூர்வ பணவீக்க எதிர்வுகூறலினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளிற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது படிப்படியாகத் துரிதமடையுமெனவும் 2026இன் இரண்டாம் அரையாண்டளவில் பணவீக்க இலக்கின் ±2 சதவீத புள்ளிகளினைக் கொண்ட எல்லையினுள் தொடர்ந்தும் காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.** இவ்வெறிவுகளிற்கமைய, 2026 சனவரியில் மின்சாரத் தீர்வைகளிற்கான எதிர்பார்க்கப்பட்ட மேல்நோக்கிய திருத்தத்தின் பொருண்மியமின்மை, எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க தாழ்ந்தளவிலான எரிபொருள் விலைச் சீராக்கங்கள், இறக்குமதிசெய்யப்பட்ட பால்மாவின் விலைக் குறைப்பு மற்றும் அதன் கசிவுத் தாக்கங்கள், அண்மைய மாதங்களில் மையப் பணவீக்கத்தின் ஒப்பீட்டளவில் மெதுவான அதிகரிப்பினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு கேள்வி நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவானதோர் அதிகரிப்பு மற்றும் பொதுவாக அண்மைய மாதங்களில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பணவீக்கத்தின் உயாந்தளவிலானதொரு தொடர்ச்சி என்பவற்றினைப் பிரதிபலித்து பணவீக்கத்தின் துரிதமடைதலானது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிகவும் மெதுவானதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. மேலுள்ள எதிர்வுகூறல் சுற்றில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தின் எறிவுசெய்யப்பட்ட பாதையானது வரைபடம் 4இல் காணப்படுகின்ற பணவீக்க வீச்சு வரைபடத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எறிவுகள் ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால், அவை நிச்சயமற்றதன்மையுடன் உட்கிடையாக இணைந்துள்ளதுடன், இது வீச்சு வரைபடத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. மேலே கலந்துரையாடப்பட்ட 3-7 சதவீத எல்லையினுள் வருகின்ற முதன்மைப் பணவீக்கத்தின் மதிப்பீடானது எறிவுகளின் பரவலின் சராசரிப் பாதையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. அதேவேளை, வீச்சு வரைபடத்தின் அடிப்படையிலான எதிர்வுகூறல் பரவலினடிப்படையில் பணவீக்கமானது 2026இன் இரண்டாம் அரைப்பகுதியளவில் 3-7 சதவீத எல்லையினுள் தொடர்ந்து காணப்படுவதற்கான நிகழ்தகவு குறைந்தபட்சம் 37 சதவீதமாக இருக்கக்கூடுமென மதிப்பிடப்படலாம். பொருளாதாரத்தின் தற்போதைய மீட்சி, நாணயத் தளர்வடைதல், இலங்கை ரூபாவின் படிப்படியான பெறுமதித்தேய்மானம் மற்றும் வலு மற்றும் போக்குவரத்துத் துறைகளில் எதிர்பார்க்கப்பட்ட பணச்சுருக்கத்தின் மறைவு என்பன முதன்மைப் பணவீக்கத்தினை இலக்கினை நோக்கி உந்தச்செய்யுமென எதிர்பார்க்கப்பட்டது. அடிப்படைப் பணவீக்கத்தின் பொதுவான அளவீடாகக் காணப்படுகின்ற மையப் பணவீக்கமானது முதன்மைப் பணவீக்க இலக்குடன் இசைந்துசெல்கின்ற மட்டமொன்றினை நோக்கிப் படிப்படியாக அதிகரித்து, நடுத்தர காலத்தில் தாழ்ந்தளவிலான தளம்பலொன்றுடன் ஒப்பீட்டளவில் உறுதியாகத் தொடர்ந்து காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

4.2. **பணவீக்கமானது இலக்கினை அண்மித்த மட்டங்களை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற மேற்குறித்துரைக்கப்பட்ட காலவரையறையானது 2026 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கக்கூடியதாகவிருந்த தரவுகள், ஊகங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் என்பவற்றின் நிபந்தனைக்குட்பட்டுக் காணப்படுகின்றது.** இவை உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சிப் பாதை, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற இறைப் பாதை, பெடரல் நிதிய வீதத்தினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைமைகள் மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதி உள்ளடங்கலாக வெளிநாட்டுத் துறையில் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகள் என்பன உள்ளடங்கலாக பல காரணிகள் மீது நிபந்தனைக்குட்பட்டுக் காணப்படுகின்றன. ஆதலால், இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றமானது எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பெற்ற பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். குறிப்பாக, உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்டுள்ள அண்மைய மாற்றங்கள் எறிவுசெய்யப்பட்ட பணவீக்க உத்வேகத்தில் கணிசமானளவிலான நகர்வொன்றிற்கு அநேகமாக வழிவகுக்கக்கூடும்.

4.3. **மேலுள்ள எறிவுகள் எவ்வாறாயினும், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிற்கிடையேயான போருடன் தொடர்புடைய அண்மைய அபிவிருத்திகள் குறிப்பாக, வலு மற்றும் எரிபொருள் விலைகள் மீது கணிசமானளவிலான மேல்நோக்கிய அழுத்தங்களை உருவாக்கியுள்ளதுடன் இதன்மூலம், முதன்மைப் பணவீக்கமானது 2026இன் இரண்டாம் காலாண்டளவில் பணவீக்க இலக்கின் ±2 சதவீத புள்ளிகளினைக் கொண்ட எல்லையினுள் காணப்படுவதற்கான உயர்ந்தளவிலான சாத்தியப்பாடொன்றினை உருவாக்கியுள்ளன.**

4.4. மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடியுடன் தொடர்புடைய பிந்திய உலக அபிவிருத்திகள் பணவீக்கத்தின் எதிர்வுகூறல் பாதையின் கணிசமானளவு திருத்தத்தை மேற்கொள்வதற்கு தேவைப்படுத்துகின்றன. இம்மாற்றங்களுக்கு பதிலிறுத்தும் விதமாக பல்வேறு மேல்நோக்கிய விலைத் திருத்தங்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. மாறிவரும் நிலைமைகளைப் பொறுத்து, குறிப்பாக வலு மற்றும் எரிபொருள் போன்றவற்றின் கசிவுத்தாக்கங்கள் உள்ளடங்கலாக மேலதிக விலைத் திருத்தங்கள் எதிர்பார்க்கப்படலாம். இதற்கமைவாக, 2026 சனவரி எறிவுகளில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் பணவீக்கம் வேகமாக அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றமையானது 2026இன் இரண்டாம் காலாண்டில் பணவீக்க இலக்கிலிருந்து ±2 சதவீதப் புள்ளிகளினுள் பணவீக்கம் இருப்பதற்கு பெரும்பாலும் வழிவகுக்கின்றது.

4.5. எனவே, பல்வேறு காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளின் அடைவிற்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிற்கிடையேயான போரின் அண்மைய தீவிரமடைதலினைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் உயர்வடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள் உலகளாவிய நிச்சயமற்றதன்மையினைக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதுடன் எண்ணெய், பண்டங்கள், கப்பலேற்றல் மற்றும் நிதியியல் சந்தைகள் என்பவற்றினை இடையூறிற்குட்படுத்தியுள்ளன. இவ்வபிவிருத்திகளின் வளர்ச்சியடைந்து வருகின்ற தன்மையினைக் கருத்திற்கொள்கின்ற போது, தற்போதைய உலகளாவிய பொருளாதாரச் சூழலானது உயர்ந்தளவில் நிச்சயமற்றதாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இவ்வபிவிருத்திகள் உலகளாவிய எண்ணெய் விலைகள் மற்றும் கப்பலேற்றல் செலவுகள் என்பவற்றில் அதிகரிப்புக்கள் ஏற்படுவதற்கு ஏற்கனவே வழிவகுத்துள்ளதுடன், இவை உள்நாட்டு வலு மற்றும் போக்குவரத்து விலைகள் உயர்வதற்குக் காரணமாயமைக்கூடும். சாத்தியமான நிரம்பல்சார் இடையூறுகள் மற்றும் அவசியமான முன்னெச்சரிக்கைசார் வழிமுறைகள் என்பவற்றுடன் இணைந்து இவ்வபிவிருத்திகள் உள்நாட்டு விலைகளில் சடுதியான கேள்வி அழுத்தங்கள் மற்றும் கசிவுத் தாக்கங்கள் என்பவற்றினையும் உருவாக்கலாம். மேலும், இலங்கை ரூபாவின் உயர்ந்தளவிலான மட்டங்களிலான சாத்தியமான பெறுமானத்தேய்வு, வலுவான கொடுகடன் வளர்ச்சியின் காலங்கடந்த தாக்கத்தினால் உந்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான கேள்வி அழுத்தங்களின் சாத்தியமான அபிவிருத்தி மற்றும் வேளாண்மை உற்பத்தி மற்றும் உணவு விலைகள் என்பவற்றில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய வளமாக்கி உள்ளடங்கலாக வேளாண்மை உள்ளீடுகளின் செலவில் சாத்தியமான அதிகரிப்புக்கள் மற்றும் வேளாண்மை மற்றும் வலுத் துறைகளினைப் பாதிக்கின்ற சாத்தியமான பாதகமான வானிலை நிகழ்வுகள் என்பன பணவீக்கத்தின் மீது மேலும் மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும். அதேவேளை, பணவீக்க எறிவுகளின் அடைவிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் டித்வா புயலுடன் தொடர்புடைய இடையூறுகளிற்குப் பின்னரான மீள்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் மேம்பட்ட தொடர்ச்சி மற்றும் வேளாண்மை வெளியீட்டிற்கு ஆதரவளிக்கின்ற மற்றும் உணவு விலை அழுத்தங்களினைத் தளர்த்துகின்ற அவற்றின் சாத்தியமான நேர்க்கணிய கசிவுத் தாக்கங்கள் என்பவற்றினை உள்ளடக்கின்றன. மத்திய கிழக்கில் நிலவுகின்ற மோதலின் நிலையற்றதன்மையினைக் கருத்திற்கொண்டு, விலைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீதான தாக்கமானது மிகவும் நிச்சயமற்றதாகவே இன்னமும் காணப்படுகின்றது. இத்தகைய தளம்பல் மிக்க பொருளாதார நிலைமைகள் எதிர்வரும் காலங்களில் நாணயக் கொள்கையை துல்லியப்படுத்துவதற்கு நாணயக் கொள்கைச் சபையினால் கவனமாக கருத்தில் கொள்ளப்படும். மத்திய வங்கியின் பணவீக்க எறிவுகள் உள்நோக்கி வருகின்ற தகவல்களிற்கமைய சீராக்கப்படுமென்பதுடன் நாணயக் கொள்கையுடன் தொடர்புடைய தொடர்பூட்டல் வழிமுறைகள் ஊடாக பொதுமக்களுக்குத் தொடர்பூட்டப்படும்.

வரைபடம் 4: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம் (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)

2026 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது



மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

§ *மத்திய வங்கிக்கும் நிதியமைச்சரிற்கும் இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கானது (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

* வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2026 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறத்தக்க சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.

குறிப்பு: வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளியினைப் பிரதிபலித்து, உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளியினுள் அமையப்பெறுவதற்கான 50 சதவீத நிகழ்தகவினை எடுத்துக்காட்டுகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் நீண்ட காலத்தில் பணவீக்க எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றன.

ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஈரானிற்குமிடையிலான போர் பரவலடைவதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்ட எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக, அதன்விளைவாக ஏற்படும் உலகளாவிய பண்ட விலைகளின் அதிகரிப்புக்களும் அவற்றின் பரவலடைந்த தாக்கங்களும் நடுத்தர பணவீக்க எறிவுகளில் இன்னும் எடுத்துக்காட்டப்படவில்லை.

இணைப்பு

வரைபடம் 5: வகைப்பாட்டு ரீதியிலான முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: 2023 சனவரிக்கு முன்னைய தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணின் (2013=100) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் 2023 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்துள்ளன. கொ.நு.வி.சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்த அடிப்படை நிறைகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.